www.Padasalai.Net www.CBSEtips.in

FM

முதல் இடைப் பருவத் தேர்வு – 2023

9 - ஆம் வகுப்பு

தமிழ்

9	2	3	5		

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - I (மதிப்பெண்கள் : 06)

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 1 X 6 = 6

1. தமிழ்விடு தூது ..... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. உலகத் தாய்மொழி நாள் என்று கொண்டாடப்படுகிறது?
   அ) மார்ச் 21 ஆ) மே 21 இ) பிப்ரவரி 21 ஈ) ஜூன் 15

4. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

பாடலைப் படித்து விடை தருக.

"எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்ந்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே"

5. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
   அ) பட்டமரம் ஆ) தமிழ்விடுதூது இ) பெரியபுராணம் ஈ) தமிழோவியம்

6. இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள சீர்மோனையை எடுத்து எழுதுக.
   அ) எத்தனை எத்தனை ஆ) சிந்தனை வீச்சுகள்
   இ) ஏந்தி வளர்த்தது ஈ) சித்தர் சிந்தனை

பகுதி - II (மதிப்பெண்கள் : 12) பிரிவு - 1

குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்) 3 X 4 = 12

7. விடைகேற்ற வினா அமைக்க.
   அ) திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ்.
   ஆ) ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5 ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

8. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

9. உங்களது பள்ளிச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

10. கணினி சார்ந்தது நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

விடை தருக. (மூன்று மட்டும்)

11. இடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ..... *(திகழ்)*.

ஆ) உலகில் மூவாயிரம் மொழிகள் ..... *(பேசு)*.

12. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ..... ஆ) கற்றோர்க்குச் சென்ற .....

13. கலைச்சொற்களைத் தமிழில் தருக.

அ) Phoneme ஆ) Conical Stone

14. சொல்லுக்குள் சொல் தேடுக.

அ) கடையெழு வள்ளல்கள் ஆ) பாய்மரக்கப்பல்

பிரிவு - 3 (மதிப்பெண்கள் : 9)

சுருக்கமான விடை தருக. (மூன்று மட்டும்)

வினா எண். 18 கட்டாய வினா. 3 X 3 = 9

15. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

16. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

17. தன்வினை பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

18. அடிபிறழாமல் எழுதுக.

அ) தித்திக்கும் ..... முதல் உண்டோ - முடிய உள்ள தமிழ்விடு தூது பாடல்.

பிரிவு - 4 (மதிப்பெண்கள் : 15)

(எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.)

19. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

20. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.

21. கடிதம் எழுதுக. 3 X 5 = 15

உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

22. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன் - இது போன்று சமூகம் சார்ந்த ஐந்து பொறுப்புகளை எழுதுக.

பிரிவு - 5 (மதிப்பெண்கள் : 08)

விரிவான விடை தருக. 1 X 8 = 8

23. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. *(அல்லது)*

'தண்ணீர்' கதையக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com CamScanner